# மெட்ரோவில், 'ஜாஸ்' இசை நிகழ்ச்சி

சென்னை, டிச. 9–

சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில், பயணியருக்காக, 11ம் தேதி, 'ஜாஸ்'இசை நிகழ்ச்சி நடக்கிறது.

சென்னையில், விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. இந்த ரயிலில் பயணியர் வருகையை அதிகரிக்க, பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ள படுகின்றன.

பயணியரை மகிழ்விக்கும் நோக்கில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், இசை பள்ளியுடன் இணைந்து, 11ம் தேதி, ஜாஸ் இசை நிகழ்ச்சிக்கு, சென்ட்ரல் மெட்ரோ நிலையத்தில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்ச்சியில், உள்ளூர் இசை கலைஞர்கள் பங்கேற்று, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில், பாடல்களை பாட உள்ளனர்; கட்டணம் கிடையாது.